# கிராமிய சேவைத் திட்டம்

**கும்பகோணம் மண்டலம்**
**தஞ்சை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை**
**மாரியம்மன்கோவில் கிராமம்**




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

| | |
|---|---|
| நோயற்ற வாழ்வு | குடும்ப அமைதி |
| கல்வியில் மேன்மை | கர்மயோக வாழ்க்கைநெறி |
| சுற்றுப்புற சுகாதாரம் | மனிதநேயம் |
| முதியோரைப் பாதுகாத்தல் | மதநல்லிணக்கம் |
| மகளிர் மேம்பாடு | சமுதாய விழிப்புணர்வு |

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# கும்பகோணம் மண்டலம்
# தஞ்சை மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# மாரியம்மன்கோவில் கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை....3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....4
4. மாரியம்மன்கோவில் கிராமத்தின் தொடக்கவிழா....5
5. மருத்துவ முகாம்-1....7
6. மருத்துவ முகாம்-2....7
7. மனநல ஆலோசனை முகாம்....7
8. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்....8
9. பிரம்மஞானம் அருள்நிதியார் பயிற்சி....8
10. அனுபவ உரை....9
11. எதிர்காலத் திட்டங்கள்: ....15
12. வாழ்த்து:....15

# 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | ***மாரியம்மன்கோவில்*** | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **19-01-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **22-06-2024** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5 *மாதங்கள்*** | | |
| 5. | மண்டலம் | ***கும்பகோணம்*** | | |
| 6. | அறக்கட்டளை | ***தஞ்சை*** | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | ***கும்பகோணம் மண்டலம்*** | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | *ஆண்:250* | *பெண்:320* | *மொ:570* |
| 9. | உடற்பயிற்சி பயின்றவர்கள் ***(Students below 14)*** | *ஆண்:85* | *பெண்:116* | *மொ:201* |
| 10. | ***கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள்*** | ***ஆண்:209*** | ***பெண்:308*** | ***மொ:517*** |
| 11. | ***காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை*** | ***ஆண்:163*** | ***பெண்:301*** | ***மொ:464*** |
| 12. | ***தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை*** | ***ஆண்:130*** | ***பெண்:209*** | ***மொ:339*** |
| 13. | ***முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:113*** | ***பெண்:205*** | ***மொ:318*** |
| 14. | ***இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:104*** | ***பெண்:184*** | ***மொ:288*** |
| 15. | ***மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:104*** | ***பெண்:183*** | ***மொ:287*** |
| 16. | ***பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:15*** | ***பெண்:35*** | ***மொ:50*** |
| 17. | ***அருள்நிதியார் பயிற்சி பெற்றவர்கள்*** | ***ஆண்:10*** | ***பெண்:09*** | ***மொ:19*** |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் **பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன்** அவர்களால் **318-**வது கிராமமாக **மாரியம்மன்கோவில்** கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் **19-01-2024-**ஆம் தேதியிலிருந்து **22-06-2024-**ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. மாரியம்மன்கோவில் கிராமத்தின் தொடக்கவிழா

***Ramraj Cotton*** *நிதி உதவியுடன்* ***கும்பகோணம் மண்டலம்***, ***தஞ்சை மனவளக்கலை*** *மன்ற அறக்கட்டளை சார்பாக* ***19-01-2024****-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,* **பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM. மயிலானந்தன்** *அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* **மாரியம்மன்கோவில்** *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*









**உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி**











## 5. மருத்துவ முகாம்-1

***14.02.2024*** *அன்று மாரியம்மன்கோவில் கிராமத்தில்* ***Vinayaka Mission Hospital*** *மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-22, பெண்கள்-43, மொத்தம்-65 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 6. மருத்துவ முகாம்-2

***05.05.2024*** *அன்று மாரியம்மன்கோவில் கிராமத்தில்* ***Vinayaka Mission Hospital*** *மூலமாக இரண்டாவது மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-42, பெண்கள்-69 ,மாணவர்கள்-14 மொத்தம்-125 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 7. மனநல ஆலோசனை முகாம்

*01.05.2024 அன்று* ***Prof.Sivaraman, Psychologist*** *அவர்களால் மாரியம்மன்கோவில் கிராமத்தில்* **மன நல ஆலோசனை முகாம்** *நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் மொத்தம் 49 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 06 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*




## 8. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் - மரக்கன்று வழங்குதல்

*01.05.2024 மாரியம்மன்கோவில் கிராமத்தில் அறக்கட்டளை பொறுப்பாளர்கள் அவர்களால் கிராம மக்களுக்கு 120 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*




## 9. பிரம்மஞானம் அருள்நிதியார் பயிற்சி

*மாரியம்மன்கோவில் கோவில் கிராமத்திலிருந்து மொத்தம் 50 அன்பர்கள் ஆழியாரில் பிரம்மஞான பயிற்சி பெற்றுக்கொண்டார்கள்.*





## 10.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | Around 98% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 2 | Around 97% of the student participants are good in studies and other activities (School & Colleges) |
| 3 | 95% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 4 | 94% of the participants are able to moralize their desire to be contented |
| 5 | 93% of the participants are able to control their anger |
| 6 | 93 % of the participants are out of the depression compared to before joining the program |
| 7 | Around 73% (281) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation- 115 participants cured of Eye problem with respect to sight, watering eyes, 89 participants cured of Blood pressure, 51 participants cured of Joint Pain, 51 participants cured of cholesterol, 51 participants cured of Anaemia, 38 participants cured of Migraine, Headache and Ulcer, 13 women participants cured of Mensural problem (PCOD). |
| 9 | **Around 98% of the participants are happy with the VSP Programme compared to only 53% before joining the program** |

## Feedback Trend





வாழ்க வையகம் வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குரு வாழ்க குருவே துணை

மஹாலக்ஷ்மி / வயது 19

என் பெயர் மஹாலக்ஷ்மி நான் தஞ்சை மாவட்டம், புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் இருந்து வருகிறேன். நான் இளங்கலை முதலாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கையில் என் அம்மா யோகாவில் இணைய கூறி வற்புறுத்தினார். விருப்பம் இல்லை என்றாலும் அம்மா கூறினார் என்று VSP யுடன் இணைந்தேன்.

தொடக்கத்தில் விருப்பம் இல்லாமல் நான் தொடர்ந்து யோகா மனவளகலைக்கு வந்தேன். நாளடைவில் யோகா செய்வதன் மூலம் உடல் புத்துணர்ச்சி அடைவதையும் என் உடல் மற்றும் மனதில் ஏற்பட்ட மாற்றங்களை உணர்ந்து ஒரு ஈடுபாடுடன் அனைத்து உடற்பயிற்சிகளையும் தவத்தினையும் கற்றேன் வழக்கமாகவும் செய்ய தொடங்கினேன் பிறகு என் அம்மா என்னை ஆழியார் சென்று பிரம்மஞான பயிற்சி கற்றுக்கொள்-ளுமாறு கூறினார் அப்பொழுதும் எனக்கு இந்த உடற்பயிற்சிகளே போதும் நான் ஆழியார் எல்லாம் செல்லவில்லை என்று கூறினேன் பிறகு அம்மா கட்டாயபடுத்த ஆழியார் சென்று பிரம்மஞான

பயிற்சிக்கு சென்றேன். ஒரு தயக்கத்தோடு தான் சென்றேன் நண்பர்கள் யாரும் இல்லாமல் முன் பின் அறியாதவர்களுடன் பயிற்சிக்கு சென்றேன் ஆனால் அவர்கள் எல்லோரும் என்னை ஊக்கவித்து என்னை பயிற்சியில் முழுமனதாக ஈடுபட செய்தார்-கள்- இந்த சூழல் என்னை அடுத்த அடுத்து ஆசிரியர் பயிற்சி மற்றும் பேராசிரியர் பயிற்சியிலும் கலந்துக்கொள்ள ஆர்வம் அதிகரித்து விட்டது.




வாழ்க வையகம்! வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்.
குரு வாழ்க! குருவே துணை!

என் பெயர் பூவானம் நான் தஞ்சையை சேர்ந்த மாரியம்மன் கோவிலில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு இளமையிலே யோகா கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை ஆனால் அதற்கான சந்தர்ப்பம் சரியாக அமையவில்லை எனது 45 வது வயதில் தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்திருக்கிறது.

இங்கு VSPயுடன் இணைந்து அனைத்து உடற்பயிற்சிகளையும் தவத்தினையும் கற்று வழக்கமாக செய்ய தொடங்கினேன், மனதிற்கு அமைதியும் புத்துணர்ச்சியும் கிடைத்தது, இங்கு பயிற்சி அளிக்கும் ஆசிரியரின் அறிவுரையின் படி ஆழியார் சென்று பிரம்மஞானப் பயிற்சி, அகத்தாய்வு என எல்லா பயிற்சிகளையும் பயின்று ஆசிரியர் பட்டமும் பெற்றேன்.

என் மகளையும் கற்றுக்கொள்ளுமாறு ஊக்குவித்து அவள் பிரம்மஞானப் பயிற்சி வரை பயின்று உள்ளார்.

இந்த மனவளக்கலையின் மூலம் நான் ஆசையை கட்டுப்படுத்துதல், சினம் தவிர்த்தல், எந்த சூழலிலும் பொறுமை மற்றும் நிதானமாக செயல்படுவதை என்னுள் உணர்கிறேன். இப்படி ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து நல்ல செயல்களையும், ஒரு மனமாற்றத்தையும் இங்கு வந்து பயின்ற அனைவருக்கும் ஏற்படுத்திக் கொடுத்த VSPக்கு என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். நானும் இவர்களைப் போல் ஒரு நல்ல ஆசிரியராக மனவளகலையுடன் இணைந்து செயல்படுவேன்.

K. Poovanam.

உ

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்! குரு வாழ்க! குருவே துணை!



என் பெயர். க. அன்பழகன். தலைமை ஆசிரியர் (ஓய்வு). மாரியம்மன் கோவில் - தஞ்சை மாவட்டம். (வயது 60)

என்னிடம் முன்கோபம், பொதுநலம் குறைவு சுயநலம் அதிகம் கொண்டதாகவும், மற்றவர்களை மன்னிக்கும் குணம் இல்லாமலும் வாழ்ந்து கொண்டு இருந்தேன்.

நான் உலக சமுதாய சேவா சங்கம் - கிராம சேவைத் திட்டம் மூலம் நடைபெற்ற மனவளக்கலைப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டமை நினைக்கவும் பெருமையாக இருக்கின்றேன்.

இப்பயிற்சி பெற்ற பிறகு தாய்க்கு வணக்கம் என்று தினந்தோறும் சொல்லிக் கொண்டு பயிற்சி செய்வதால் என் அம்மாவிடம் கோபம் படுவதை விட்டுவிட்டேன். மற்றவர்களிடமும் கோபப்படுவதை தவிர்த்துவிட்டேன். இப்பயிற்சியினால் விட்டுக்கொடுக்கும் தன்மை, சகிப்புத்தன்மை, மற்றவர்களை அனுசரித்து வாழ்ந்து கொண்டே இருத்தல், மற்றவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்யும் மனப்பான்மை போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொண்டேன். மற்றவர்கள் மீது குறை சொல்லும் குணத்தை நீக்கிவிட்டு, தன்மேல் உள்ள தவறை உணரும் எண்ணத்தை வளர்த்துக் கொண்டேன்.

எங்களுக்கு [illegible] பயிற்சி அளித்த எங்களின் குரு பேராசிரியர் திரு. சோமசுந்தரம் அவர்களும் பேராசிரியை திருமதி. S. பொற்செல்வி அவர்களும் குருவாக [illegible] இருந்து பயிற்சி அளித்த விதம் மிகவும் சிறப்புடையதாகும். அவர்களிடம் யோகா பயிற்சி மட்டும் பெறவில்லை. நல்ல பண்புகளையும் கற்றுக் கொண்டோம்.

எங்களை பிரம்மஞான பயிற்சிக்கு அழைத்து சென்று வந்ததும் அருள்நிதி பயிற்சிக்கும் (ஆசிரியர் பயிற்சி), பேராசிரியர் திரு. புருஷோத்தமன் தஞ்சாவூர் அறிவு திருக்கோவில் பேராசிரியர்கள் கும்பகோணம் பேராசிரியர் திரு. முத்து போன்ற பல பேராசிரியர்களை அழைத்து வந்து நல்ல பல கருத்துக்களை நாங்கள் அறிந்து கொள்ள செய்ததற்கும், இலவச மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் வழங்கியதற்கும் பாராட்டுகள் மற்றும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்கள் எங்களுக்கு குருவாக அமைந்தது வேதாத்திரி மகரிஷி அய்யா எங்களுக்கு அருளாக நினைக்கின்றேன்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

(க. அன்பழகன்)

வாழ்க வையகம் வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.

எனது பெயர் நாராயணசாமி சிவராமகிருஷ்ணன். நான் தஞ்சாவூர் மாரியம்மன் கோவில் கிராமிய சேவை திட்டத்தில் மனவளக்கலை பயிற்சியை எடுத்து வருகிறேன். எனது வயது 68.

இப்பயிற்சிக்கு முன், தேவையில்லாத கவலைகள் என்னை ஆட்கொண்டு இரவில் பெரும்பாலும் தூக்கம் இல்லை. இதன் பொருட்டு உடல்நலம் சுறுசுறுப்பின்மை போன்றவைகளால் பாதிப்பு அடைந்து வந்தேன். இப்பயிற்சியில் கவலைகள் ஒழித்தல் என்ற அகத்தாய்வு மூலம் படிப்படியாக கவலைகள் குறைந்து உடல்நலம் தூக்கமின்மை மேம்பாடு அடைந்து தற்பொழுது சுறுசுறுப்பாக இருந்து வருகிறேன்.

இப்பயிற்சியினை முறையாக மேற்கொண்டு மக்களுக்கு வேதாத்திரி மகரிஷி சொல்லிய வண்ணம் தொண்டு செய்து இன்பம் காண்பேன்.

இப்பயிற்சி அளித்த மனவளக்கலை மன்ற ஆசிரியர்களுக்கு இதன் மூலம் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

"வாழ்க வேதாத்திரியம்."

"நன்றி."





வணக்கம்! வாழ்க வளமுடன்.

* என் பெயர் ச. கனிஷ்கா ஸ்ரீ. வயது-15 நான் சி.எஸ்.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கின்றேன்.

* முன்பெல்லாம் என்னால் மனதை ஒருநிலைப்படுத்தி படிப்பதற்கு சற்று கடினமாக இருக்கும். இப்பொழுது மனவளக்கலை யோகாவின் தியானத்தின் மூலம் என்னால் மனதை ஒருநிலைப்படுத்தி படிக்கமுடிகிறது.

* எங்கள் ஊரில் நடைபெறும் கிராமிய சேவை திட்டத்தின் மூலம் நான் கற்றுக்கொண்ட உடற்பயிற்சி மற்றும் காயகல்ப பயிற்சிகள் என்னை நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்கிறது.

* குறிப்பாக கண்பயிற்சியின் மூலம், நான் எனது கண்கள் புத்துணர்வாய் இருப்பதை உணர்கிறேன்.

* என்னைப் போன்று மாணவர்களுக்கு யோகா மிகவும் பயனுள்ள ஒன்று, குறிப்பாக இன்றைய காலக்கட்டத்தில்.

* ஆகையால், என் போன்று பல மாணவர்கள் இதனைக் கற்று அவர்களும் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

S. Kanishkasri

## 11. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க ***மாரியம்மன்கோவில்*** கிராமம், ***தஞ்சை மனவளக்கலை*** மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 12. வாழ்த்து:

***மாரியம்மன்கோவில்*** கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், **பத்மஸ்ரீ.அருள்நிதி**.SKM.**மயிலானந்தன்** அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய ***Ramraj Cotton-க்கும்,*** இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த **கும்பகோணம் மண்டல** பொறுப்பாளர்களுக்கும், ***தஞ்சை மனவளக்கலை*** மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் ***A/N.A.Somasundaram & Prof.N.Porselvi*** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய ***VSP நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு*** உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

***உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை***
***உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.***
***உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே***
***உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.***

***-வேதாத்திரி மகரிஷி***

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*